# தென்னை வளர்ச்சி வாரியத்தின் திட்டங்கள்

உலகில் தென்னை உற்பத்தியிலும், உற்பத்தித்திறனிலும் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் 19 மாநிலங்களிலும் 4 யூனியன் பிரதேசங்களிலும் மொத்தம் 2.10 மில்லியன் ஹெக்டேரில் தென்னை பயிராகிறது.

இந்தியாவில் தென்னைத்துறை பயிர் சாகுபடி, விளைபொருள் மற்றும் மதிப்புக்கூட்டும் பொருள் பதப்படுத்துதல், சந்தைப்படுத்துதல் மற்றும் வணிக நடவடிக்கைகள் உள்ளிட்ட தொழில்களில் சுமார் 12 மில்லியன் மக்களுக்கு வாழ்வாதாரமாக விளங்குகிறது.

இந்தியாவில் தென்னை அதிகளவில் பயிராகும் கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் இந்தியாவின் மொத்த உற்பத்தி பரப்பில் 89%, உற்பத்தியில் 91% ஆகும். நாட்டில் தென்னை சாகுபடி செய்பவர்களில் 98% 2 ஹெக்டேருக்கும் குறைவாக நிலம் வைத்திருப்பவர்களே ஆகும். நமது நாட்டில் 2021 -22ம் ஆண்டில் 19247 மில்லியன் காய்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. ஆண்டு உள்நாட்டு வருமானத்தில் தென்னையின் பங்கு ரூ. 3,10,000 மில்லியனுக்கு அதிகமானதாகும்.

**<u>தென்னை வளர்ச்சி வாரியத்தைப் பற்றி:</u>**

நாட்டில் தென்னை சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்களை புகுத்தி நவீனப்படுத்தவும், தென்னை தொழில்துறையை மேம்படுத்தவும், தென்னையின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், இவற்றின் மூலம் தென்னை விவசாயிகள் நலனை பாதுகாக்கவும் முக்கிய நோக்கமாக கொண்டு இந்தியாவில் அமைக்கப்பட்ட தென்னை வளர்ச்சி வாரியம் 12.1.1981 அன்று செயல்படத் தொடங்கியது.

தென்னை வளர்ச்சி வாரியம், கொச்சியை தலைமை இடமாகக் கொண்டு மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறையின் கீழ் இயங்கி வருகிறது. இவ்வாரியத்திற்கு பெங்களூர், சென்னை, கவுகாத்தி, பாட்னா ஆகிய நான்கு இடங்களில் மண்டல அலுவலகங்கள் உள்ளன. இது தவிர பிட்டபள்ளி (ஒடிஷா), கொல்கத்தா (மேற்கு வங்காளம்), தானே (மகாராஷ்ட்ரா), விஜயவாடா (ஆந்திரா), போர்ட் பிளேர் (அந்தாமான் நிகோபார் தீவுகள்) ஆகிய இடங்களில் மாநில மையங்களும் செயல்படுகின்றன. புதுடெல்லியில் தென்னை பொருள் வணிகம்

மற்றும் தகவல் மையம் செயல்படுகிறது. கேரள மாநிலத்தில் ஆலுவா அருகே வாழக்குளத்தில் தொழில்நுட்ப வளர்ச்சி மையம் செயல்பட்டு வருகிறது.

**<u>தென்னை வளர்ச்சி வாரியத்தின் திட்டங்கள்:</u>**

தென்னை வளர்ச்சி வாரியத்தின் மூலம் ஒருங்கிணைந்த தென்னைத்துறை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பின்வருமாறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன

1. தரமான தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகித்தல்
2. தென்னை சாகுபடி பரப்பினை விரிவு படுத்துதல்
3. உற்பத்தி திறனை மேம்படுத்த ஒருங்கிணைந்த பண்ணையத்தை செயல்படுத்துதல்
4. தொழில்நுட்ப செயல்விளக்க மையம் மற்றும் தரப்பரிசோதனை ஆய்வகம் அமைத்தல்
5. சந்தை மேம்பாடு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் விளம்பரம் செய்தல் ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன.
6. இவை தவிர, தென்னை தொழில்நுட்ப இயக்கத்தின் கீழ், தென்னை வளர்ச்சி வாரியத்தின் மூலம் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகளை விளக்குதல் மற்றும் விவசாயிகளை கடைப்பிடிக்கச் செய்தல், தென்னை பொருள் உற்பத்தியில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கி அவற்றை அவர்களை கடைப்பிடிக்கச் செய்தல், மதிப்புக் கூட்டும் பொருள் தயாரித்தல் மற்றும் சந்தை குறித்த ஆராய்ச்சி மற்றும் சந்தை மேம்பாடு ஆகிய திட்டங்களும் செயல்படுத்படுகின்றன .

**<u>உற்பத்தி சார்ந்த திட்டங்கள்:</u>**

1. தரமான தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகித்தல்
2. தென்னை சாகுபடி பரப்பினை விரிவு படுத்துதல்
3. உற்பத்தி திறனை மேம்படுத்த ஒருங்கிணைந்த பண்ணையத்தை செயல்படுத்துதல்

**<u>உற்பத்தி திறன் மேம்பாடு மற்றும் நோய் ஒழிப்பு:</u>**

தென்னை தோட்டங்களில் புதிய கன்றுகளை நடவு செய்தல் மற்றும் தென்னை தோட்டத்தை புதுப்பித்தல்

**<u>தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் சந்தை மேம்பாடு:</u>**

தென்னை தொழில்நுட்ப இயக்கம், தொழில்நுட்ப செயல்முறை விளக்கம் , தரக்கட்டுப்பாடு, சந்தை, சந்தை தகவல் தொடர்பு, புள்ளி விபரங்கள் சேகரித்தல்

***ஏற்றுமதி மேம்பாடு:***

*ஏற்றுமதி வளச்சி குழு அமைத்தல்*

***விளம்பரம் மற்றும் தகவல் தொடர்பு:***

*தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பம்*

***காப்பீட்டுத் திட்டம்:***

*தென்னை பயிர் காப்பீடு, கேரா சுரக்ஷா காப்பீடு*

***தென்னங்கன்று உற்பத்தி மற்றும் விநியோகம்:***

*தென்னை விவசாயிகளின் தேவையை நிறைவு செய்யத் தரமான தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகித்தல்*

***(1) மாதிரி செயல்விளக்கம் மற்றும் விதை உற்பத்தி பண்ணை (DSP) அமைத்தல்***

*நாடு முழுவதும் பத்து இடங்களில் மாதிரி செயல்விளக்கம் மற்றும் விதை உற்பத்தி பண்ணை அமைத்தல். இதன் மூலம் தரமான கன்றுகளை உற்பத்தி செய்யும் முறை விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்யப்படுவதுடன், விவசாயிகள் தங்களுக்கு தேவையான தரமான தென்னங்கன்றுகளை இப்பண்ணை மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.*

***(2) மண்டல அளவிலான தென்னை நாற்றுப்பண்ணை அமைத்தல்:***

*நோக்கம்: மாநில அரசு பண்ணைகளில் செயல்படுத்தும் நாற்றுப்பண்ணை திட்டங்களுக்கு உதவுதல். தென்னை விதை மற்றும் கன்று உற்பத்திக்கு நிதி உதவி மற்றும் தொழில்நுட்ப உதவி அளித்தல்.*

*நிதி உதவியின் தன்மை: மாநில அரசுத் திட்டங்களில் ஒரு தென்னங்கன்றை உற்பத்தி செய்யும் செலவில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சம் ஒரு கன்றுக்கு ரூ.16 நிதி உதவிஅளித்தல்*

***(3) தாய் மற்றும் கலப்பின விதைத்தோட்டங்கள் அமைத்தல்:***

*நோக்கம்: தேர்ந்தெடுக்கப்பட்ட சாகுபடியாளர்களின் தோட்டத்தில் அவர்களது எதிர்கால தென்னங்கன்றுகளின் தேவையை கருத்திற்கொண்டு தாய் நெற்றுக்கள் உற்பத்தி பண்ணைகளை அமைத்துக் கொள்ள உதவுவதல். பல்வேறு மாநிலங்களில் தொடர்ந்து தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு தேவையான அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுத்தல்.*

*நிதி உதவியின் தன்மை: 4 ஹெக்டேரில் தாய் நெற்றுக்கள் உற்பத்திப் பண்ணை அமைப்பதற்கு ஆகும் செலவில் 25 சதவீதம் அல்லது அதிகபட்சம் ரூ. 6 லட்சம் (மூன்று ஆண்டு கால அளவில்) வழங்கப்படும்.*

*(4) சிறிய அளவிலான தென்னை நாற்றுப்பண்ணை அமைத்தல்:*

*<u>நோக்கம்:</u> தனியார் துறையிலும், தென்னை உற்பத்தியாளர் அமைப்புகளிலும் சிறிய அளவிலான தரமான தென்னை நாற்றுகளை உருவாக்கும் பண்ணை அமைத்தல்.*

*<u>நிதி உதவியின் தன்மை:</u> 6250 தென்னை நாற்றுகளை உற்பத்தி செய்யும் அலகுக்கு அதிகபட்சமாக ரூ.50,000-மும், 25 ஆயிரம் நாற்றுகளை உற்பத்தி செய்யும் அலகுக்கு அதிகபட்சமாக ரூ.2 லட்சமும் வழங்கப்படும்.*

## <u>தென்னை சாகுபடி பரப்பை விரிவாக்குதல்:</u>

நோக்கம்: தென்னை சாகுபடி செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக மான்யம் அளித்தல்.

| ஒரு ஹெக்டேருக்கு மானியம் ரூ | | |
|---|---|---|
| **ரகம்** | **சமவெளி** | **மலைப்பகுதி** |
| நெட்டை | 6500 | 13750 |
| கலப்பினம் | 6750 | 13750 |
| குட்டை | 7500 | 15000 |

## <u>உற்பத்தித் திறனை மேம்படுத்த ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்தல்:</u>

1. <u>மாதிரி செயல் விளக்க திடல்கள் அமைத்தல்</u>

<u>நோக்கம்:</u> தென்னை வளர்ச்சி வாரியம், அரசு, உழவர் உற்பத்தியாளர் அமைப்பு ஆகியவற்றின் மூலம் 25 ஹெக்டேர் முதல் 50 ஹெக்டேர் வரை உயர் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உற்பத்தி திறனை அதிகரிக்கும் திட்டம் மற்றும் தென்னையில் ஊடுபயிர், கலப்புபயிர்கள் சாகுபடியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் திட்டமாகும்.

<u>நிதி உதவியின் தன்மை:</u> ரூ.35,000 மதிப்புள்ள இடுபொருட்கள் மானியமாக இரண்டு ஆண்டுகளில் வழங்கப்படும்

2. இயற்கை உரத் தயாரிப்பு நிலையம் :

<u>நோக்கம்:</u> மண்புழு உரம், கயிறு கழிவுகளில் இருந்து தயாரிக்கப்படும் உரம் போன்ற இயற்கை உரங்களை சொந்தமாக தயாரித்து தென்னை சாகுபடியில் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு இயற்கை உரத் தயாரிக்க நிதி உதவி அளித்தல்.

*<u>நிதி உதவியின் தன்மை:</u> 1200 கன அடி மண்புழு உரம் தயாரிப்பு அலகு அமைப்பதற்கு ஆகும் செலவு முழுவதும் அதிகபட்சமாக ரூ.60 ஆயிரம் வரை அளிக்கப்படுகிறது. (அதிகபடசம் 60அடி x 8அடி x 2.5அடி (அல்லது) 30அடி x 8அடி x 2.5அடி கொண்ட 2 அலகு. குறைந்த பட்சம் 15அடி x 8அடி x 2அடி (150 கன அடி).* ***ஒரு கன அடிக்கு ரூ.50 மானியமாக வழங்கபடுகிறது.***

*கயிறு கழிவு உரம் தயாரிப்பு அலகு அமைப்பதற்கு ஆகும் செலவு முழவதும் அதிகபட்சமாக ரூ.60 ஆயிரம் வரை மானியம் அளிக்கப்படுகிறது. (கான்கிரீட் தளம்: அதிகபட்சம் 5மீ x 3மீ (40 யூனிட்) ஆண்டுக்கு 80 டன் உற்பத்தி திறன். குறைந்தபட்சம் 5மீ x 3மீ (5 அலகு) ஆண்டுக்கு 10 டன் உற்பத்திதிறன்.*

**<u>தென்னை தோட்டங்களில் மறு நடவு மற்றும் புத்துயிரூட்டல்: (R&R திட்டம்)</u>**

*<u>திட்டத்தின் முக்கிய நோக்கம்:</u> கடுமையாக நோயால் பாதிக்கப்பட்ட மரங்கள், காய்க்காத மரங்கள், வலுவிழந்த மரங்கள் ஆகியவற்றை அகற்றி விட்டு அந்த இடங்களில் புதிய கன்றுகளை நடுவது மற்றும் பழைய மரங்களை செறிவூட்டுதல் ஆகும். R&R திட்டம் 2009ம் ஆண்டு முதல் செயல்படுத்த தொடங்கப்பட்டு தொடர்ந்து நடந்து வருகிறது. இந்தியாவில் பாரம்பரியமாக தென்னை பயிரிடும் மாநிலங்களில் இந்த R&R திட்டம் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

| **திட்டத்தின் உள்ளடக்கமும் ஊக்கத் தொகையும்** | |
|---|---|
| கடுமையான நோய் தாக்கிய பழைய மற்றும் வலுவிழந்த மரங்களை அகற்றுதல் | ஒரு ஹெக்டேருக்கு ரூ. 32,000 மானியம் |
| பரிந்துரைக்கப்பட்ட மேலாண்மை முறைகளின் மூலம் தற்போதைய மரங்களை செறிவூட்டுதல் | ஒரு ஹெக்டேருக்கு ரூ. 17,500 மானியம் (2 வருட காலத்தில்) |
| நோய் மற்றும் பூச்சி தாக்கு எதிர்ப்பு திறன் கொண்ட தரமான குட்டம் மற்றும் ஹைபிரிட் ரகங்களை பயிரிடுதல் | ஒரு ஹெக்டேருக்கு ரூ.4000 மானியம் |

**<u>தென்னை வளர்ச்சி வாரியத்தின் தொழில் நுட்ப நிலையம் (CIT)</u>**

கேரள மாநிலம், ஆலுவா அருகே வாழக்குளத்தில் இயங்கி வரும் தென்னை வளர்ச்சி வாரியத்தின் தொழில் நுட்ப நிலையமானது (CIT) தென்னை சாகுபடியில்

நவீன தொழில்நுட்பங்கள், மதிப்புக் கூட்டும் பொருள் தயாரித்தல், துணை பொருட்கள் தயாரித்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப முறைகள், தொழில் முனைவோருக்கு பயிற்சிகளை அளிக்கிறது. மேலும் இந்நிலையத்தில் முழு அளவிலான தென்னை பொருள் ஆய்வகம் செயல்படுகிறது. இதில் தென்னை பொருள்கள் நுண்ணாய்வு செய்யப்படுகிறது.

| தென்னை தொழில்நுட்ப நிலையத்தில் அளிக்கப்படும் பயிற்சிகள் | | | |
|---|---|---|---|
| **பயிற்சியின் பெயர் மற்றும் கால அளவு** | **கட்டணம் ரூ** | **பொருள்** | **பயிற்சி அளிக்கப்படும் மக்கள் தொகுதி** |
| தென்னை உணவு தயாரிப்பு செயல் விளக்கம் - 1 நாள் | ரூ.500 ( ஒரு நபருக்கு) | கோகனட் சிப்ஸ், சாக்லெட், குக்கீஸ், எலுமிச்சை கலந்த சாறு ஊறுகாய் (பாடம் செய்முறை, பேக்கிங்) | மகளிர் குழு, தனிநபர், தென்னை உற்பத்தியாளர் அமைப்பு, உழவர் உற்பத்தியாளர் அமைப்பு, உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் மற்றும் கூட்டமைப்பு |
| தென்னை உணவு தயாரிப்பு செயல் விளக்கம் - 1 நாள் | ரூ.2000 ( ஒரு நபருக்கு) | கோகனட் சிப்ஸ், சாக்லெட், குக்கீஸ், எலுமிச்சை கலந்த சாறு ஊறுகாய், சட்னி, பவுடர், பால், கேண்டி, ஜெல்லி (பாடம் செய்முறை, பேக்கிங்) | மகளிர் குழு, தனிநபர், தென்னை உற்பத்தியாளர் அமைப்பு, உழவர் உற்பத்தியாளர் அமைப்பு, உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் மற்றும் கூட்டமைப்பு |
| தேங்காய் தண்ணீரிலிருந்து வினிகர் மற்றும் நேட்டா-டி-கோகோ தயாரித்தல் 1 நாள் | ரூ.2000 (ஒரு நிறுவனம்) (2 நபர்) | கோகனட் வினிகர் | அடிப்படை அறிவியல் அறிவு கொண்ட மகளிர் குழு, தனிநபர், தென்னை உற்பத்தியாளர் அமைப்பு, உழவர் உற்பத்தியாளர் அமைப்பு, உழவர் உற்பத்தியாளர் |

| | | | |
|---|---|---|---|
| | | | நிறுவனம் மற்றும் கூட்டமைப்பு |
| இளநீர் பதப்படுத்துதல் 1 நாள் | ரூ.1000 ( ஒரு நிறுவனம் ( 2 நபர் | இளநீர் பதப்படுத்துதல் | மகளிர் குழு, தனிநபர், தென்னை உற்பத்தியாளர் அமைப்பு, உழவர் உற்பத்தியாளர் அமைப்பு, உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் மற்றும் கூட்டமைப்பு |
| நீராவிலிருந்து மதிப்புக் கூட்டும் பொருள் தயாரித்தல் 6 நாட்கள் | ரூ.2000 ( ஒரு நபருக்கு) தங்கும் வசதி இல்லை | நீராவிலிருந்து மதிப்புக் கூட்டும் பொருள் தயாரித்தல் | தென்னை உற்பத்தியாளர் சொசைட்டி, தென்னை உற்பத்தியாளர் கூட்டமைப்பு |
| தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு பயிற்சி ( புதியதாக அறிமுகப்படுத்துதல்) - 4 நாட்கள் | ரூ.5000 | தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்புகள் மற்றும் தென்னை வளர்ச்சி வாரியத்தின் திட்டங்கள் | |
| தேநீர் மற்றும் மதிய உணவு மேற்கண்ட பயிற்சிகளின் போது வழங்கப்படும் | | | |
| தென்னை பதப்படுத்துதல் பயிற்சி (ஒரு மாதம்) | ரூ.12000 (ஒரு நபருக்கு) | தென்னை உணவு பொருள் தயாரிப்பு பயிற்சி, நீராவை அடிப்படையாக கொண்டு மதிப்புக் கூட்டும் பொருள் தயாரிப்பு பயிற்சி, ( பாடம் வர்ஜின் கோகனட் ஆயில் தயாரிப்பு, தேங்காய் பவுடர் தயாரிப்பு, தேங்காய் பால் தயாரிப்பு உணவு பாதுகாப்பு மற்றும் சுத்தம் | குறைந்த பட்ச கல்வித் தகுதி இளங்கலை பட்டம் |
| தென்னை பொருட்கள் ரசாயன பகுப்பாய்வு ஒரு வாரம். | ரூ.7500 (ஒரு நபருக்கு) | தென்னை பொருட்கள் ரசாயன பகுப்பாய்வு | குறைந்த பட்ச கல்வித் தகுதி இளங்கலை அறிவியல் பட்டம் (வேதியியல், உயிர்வேதியியல், உணவு வேதியியல், |

| | | | |
|---|---|---|---|
| | | | உணவு தொழில்நுட்பம் ) |
| நுண்ணுயிரியல் பகுப்பாய்வு (2 வாரம்) | ரூ.15000 (ஒரு நபருக்கு) | நுண்ணுயிரியல் பகுப்பாய்வு | குறைந்த பட்ச கல்வித் தகுதி இளங்கலை அறிவியல் பட்டம் (நுண்ணுயிரியல்) |

**சந்தை ,சந்தை ஆய்வு, புள்ளி விபரம் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு**

நாட்டில் தென்னைத்துறையின் முன்னேற்றத்திற்காக தென்னை வளர்ச்சி வாரியச் சட்டத்தில் வகுக்கப்பட்ட விதிமுறைகளின் படி சந்தை மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**சந்தை மேம்பாடு:** தென்னை வளர்ச்சி வாரியம் , தென்னை பொருட்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பல்வேறு பொருட்களின் வணிகத்தை கருத்திற்கொண்டு, பிரசாரங்கள், விழிப்புணர்வு முகாம்கள், விளம்பரங்கள், தேசிய அளவிலும் பன்னாட்டு அளவிலும் வாங்குவோர் விற்போர் சந்திப்புகள், கண்காட்சிள், விழாக்கள் போன்றவற்றை தொடர்ந்து நடத்தி வருகிறது.

**சந்தை ஆய்வு:** நாட்டின் முக்கிய சந்தைகளில் தேங்காய்களின் வரவு, கொப்பரை, தேங்காய் எண்ணெய் விலைகள் குறித்த தினசரி, வாராந்திரம், மாத இருமுறை, மாதாந்திர மற்றும் ஆண்டு புள்ளி விபரங்களை சேகரித்து தொகுத்து, பகுப்பாய்வு செய்து விவசாயிகளுக்கும் தென்னை தொழில் முனைவோர்களுக்கும் அளிக்கிறது.

**ஏற்றுமதி மேம்பாட்டுக் குழு:** மத்திய அரசின் வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம், தென்னை துறை சம்பந்தமான ஏற்றுமதி விவகாரங்களுக்கு தென்னை வளர்ச்சி வாரியத்தை ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுவாக அங்கீகரித்துள்ளது. தென்னை வளர்ச்சி வாரியத்தின் கீழ் தென்னை சம்பந்தமாக ஏற்றுமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களும் (கயறு மற்றும் அது தொடர்பான பொருட்கள் தவிர) தென்னை வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன. இதனால் தென்னை பொருட்களை ஏற்றுமதி செய்பவர்களுக்கு பதிவு மற்றும் உறுப்பினர் சான்றிதழ் (Registration cum Membership Certificate- RCMC.) தென்னை வளர்ச்சி வாரியத்தால் வழங்கப்படுகிறது.

## தென்னை தொழில் நுட்ப இயக்கம் : ( TMoC)

நவீன தொழில் நுட்பங்களின் மூலம் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு, தென்னை மதிப்புக் கூட்டும் பொருள் தயாரித்தல் மற்றும் செயல்விளக்கம், இவற்றை விவசாயிகளை கடைப்பிடிக்கச் செய்தல் ஆகிய தென்னை தொழில்நுட்ப இயக்கத்தால் செயல்படுத்தப்படுகின்றன.

| திட்டச் செயல்பாடு1: பூச்சி மற்றும் நோய் தாக்கிய தோட்டங்களில் மேலாண்மை | | |
|---|---|---|
| **தொழில்நுட்ப வளர்ச்சியை உருவாக்குதல்** | **தொழில் நுட்ப செயல் விளக்கம்** | **தொழில்நுட்ப முறைகளை பின்பற்றுதல்** |
| ஐசிஏஆர், வேளாண் பல்கலை கழகங்கள், கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றிட்கு மொத்த திட்டத் தொகை 100% அல்லது அதிகபட்சமாக ரூ.50 லட்சம் நிதி உதவி | ஐசிஏஆர், வேளாண் பல்கலை கழகங்கள், பதிவு பெற்ற கூட்டுறவு சங்கங்கள், பொதுத்துறை நிறுவனங்கள்ளுக்கு திட்டத் தொகை 100% அல்லது அதிகபட்சமாக ரூ.25 லட்சம் நிதி உதவி | தொழில்நுட்பத்தை பயன்படுத்தியதில் ஆகும் செலவில் 25% |
| என்.ஜி,ஓ மற்றும் பிற அமைப்புகளுக்கு திட்டத் தொகையில் 50% அல்லது அதிகபட்சமாக ரூ.25லட்சம் நிதி உதவி | தனி நபர்கள், விவசாயிகள் குழு, என்.ஜி.ஓ., தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றிட்கு திட்த் தொகையில் 50% அல்லது அதிகபட்சமாக ரூ.10 லட்சம் நிதி உதவி | ஏன்.ஜி.ஓ. உழவர் அமைப்புகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு தொழில்நுட்பத்தை பயன்படுத்தியதில் ஆகும் செலவில் 25% |

| திட்டச் செயல்பாடு2: பதப்படுத்துதல் மற்றும் பன்முக பொருட்கள் உற்பத்தி | | |
|---|---|---|
| **தொழில்நுட்ப வளர்ச்சியை உருவாக்குதல்** | **தொழில் நுட்ப செயல் விளக்கம்** | **தொழில்நுட்ப முறைகளை பின்பற்றுதல்** |
| அரசுத் துறைகள் மற்றும் சங்கங்களுக்கு ஆகியவற்றிட்கு திட்டத் தொகை 100% அல்லது அதிகபட்சமாக ரூ.75 லட்சம் நிதி உதவி | அரசுத் துறை நிறுவனங்களுக்கு திட்டத் தொகை 100% மானியம் | திட்டச் செலவினத்தில் 25மூ .திட்டக் காலம் முடிந்ததும் பெறும் வகையில் (Back End **Subsidy**) வழங்கப்படும் |
| என்.ஜி,ஓ , தனிநபர், தொழில் முனைவோர், பிற ஆராய்ச்சி அமைப்புகள் ஆகியவற்றிட்கு திட்டச் செலவினத்தில் 75சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.35லட்சம் நிதி உதவி | தனி நபர்கள், விவசாயிகள் குழு, என்.ஜி.ஓ., தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றிட்கு திட்டத் தொகையில் 50% | ஆதிதிராவிடர், பழங்குடியினர், பெண்களுக்கு 33.3 % அந்தமான் நிகோபாரில் உள்ள **HVA** பிரிவினருக்கு 50% அதிகபட்சமாக ரூ.50லட்சம் நிதி உதவி |

## <u>தகவல் மற்றும் தகவல் தொழில் நுட்ப நடவடிக்கைகள்</u>

தென்னை சாகுபடி மற்றும் தென்னை துறை சம்பந்தமான பல்வேறு அம்சங்கள் குறித்த தகவல்களை மீடியா மற்றும் வெளியீடுகள் மூலமாக பரப்புதல். இது தவிர விவசாயிகள், வேலை தேடும் இளைஞர்கள், கிராமப்பு பெண்களுக்கு தொழில் நுட்ப திறன் சம்பந்தமான தகவல் மற்றும் பயிற்சி அளித்தல், கண்காட்சி மற்றும் பொருட்காட்சி நடத்துதல் மற்றும் அவற்றில் பங்கேற்றல் ஆகியன இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

**<u>வெளியீடுகள்:</u>** வாரியத்தின் செயல்கள், புத்தக வெளியீடுகள் மூலமும் மற்றும் அவ்வப்போதும் தென்னை சம்பந்தமான தகவல்களை இனையம் மூலமும் வெளியிடப்பட்டு வருகிறது.

**<u>மீடியா வழி:</u>** தென்னையில் பல்வேறு மதிப்புக் கூட்டும் பொருள் தயாரிப்புகள், நுகர்வோர் தேவை, சந்தை தகவல்கள் மீடியாக்கள் மூலம் வெளியிடுதல்.

## <u>திறன் மேம்பாட்டுப் பயிற்சி</u>

1. நீரா தொழில் நுட்பாளர் பயிற்சி மற்றும் கைத்திறன் உற்பத்தியாளர் பயிற்சி
2. தென்னை மரத்தின் நண்பர்கள் (FoCT):

**<u>நோக்கம்:</u>** தென்னை மரங்களில் அறுவடை செய்யவும், தென்னை மரங்களை நவீன தொழில்நுட்ப முறையில் பராமரிப்பது தொடர்பாகவும் இளைஞர்களுக்கு செயல் அறிவு ஏற்படுத்துவதற்காக 'தென்னை மரத்தின் நண்பர்கள்' என்ற குழு ஏற்படுத்தப்பட்டு வருகிறது

**<u>கருத்தரங்கம் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்:</u>** தென்னை சாகுபடி தொழில்நுட்பங்களை விவசாயிகள், தொழில் முனைவோர்கள் அறிந்து பயன்படுத்தும் வகையில் உழவர்கள் குழு அமைப்புகளிலும், கிராம, வட்டார, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் கருத்தரங்கங்கள், விழிப்புணர்வு முகாம்களை நடத்துதல்.

**<u>கண்காட்சி:</u>** தென்னை உற்பத்தி மற்றும் தென்னை உற்பத்தி பொருட்களில் பல்வேறு மதிப்புக் கூட்டும் பொருள் தயாரிப்புகள் குறித்து உள்நாட்டிலும் உலகளவிலுமான பொருட்காட்சிகளில் தொடர்ந்து பங்கேற்றல்.

**<u>தேசிய விருதுகள்:</u>** தென்னை வளர்ச்சி வாரியத்தின் சார்பில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நாடு முழுவதிலிமிருந்து தென்னை சாகுபடி உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனில் சாதனை படைக்கும் விவசாயிகள், தென்னை சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்களை செயல்படுத்தும் விவசாயிகள், புதிய தயாரிப்புகள், ஏற்கனவே உள்ள உற்பத்தி பொருட்களில் புதிய முறைகள், தர மேம்பாடு, பன்முக

உற்பத்தி, சந்தை, ஏற்றுமதி, விரிவாக்க பணிகளில் சாதனை படைக்கும் விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு தேசிய விருதுகள் வழங்கப்படுகின்றன.

**உழவர் உற்பத்தியாளர் அமைப்பு தென்னை துறையின் புதிய அங்கம்**

தென்னை வளர்ச்சி வாரியம், நமது நாட்டின் தென்னை உற்பத்தித்திறனை அதிகப்படுத்தவும், பல்வேறு திட்டங்களை செயல்படுத்தவும் மூன்றடுக்கு முறையிலான உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை உருவாக்கி உள்ளது.

உற்பத்தி திறனை உயர்த்துதல், உற்பத்தி செலவினை குறைத்தல், மதிப்புக் கூட்டும் பொருள் தயாரித்தல், உற்பத்தி பொருட்களை பதப்படுத்தி சந்தைப் படுத்துதல், சிறந்த உப பொருட்கள் தயாரித்தல் மற்றும் சந்தை வாய்ப்புகளை அறிதல், விற்பனை நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுதல் ஆகியவற்றின் மூலம் தென்னை விவசாயிகளின் வருமானம் அதிகரித்து அவர்களது சமுதாய பொருளாதார மேம்பாட்டினை உயர்த்துதலை நோக்கமாக கொண்டு உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை தென்னை வளர்ச்சி வாரியம் ஏற்படுத்தி வருகிறது.

இந்த மூன்றடுக்கு அமைப்பில் உழவர் உற்பத்தியாளர் அமைப்புடன் கூடிய தென்னை உற்பத்தியாளர் சங்கம் (CPS) ஒரு ஆரம்ப கட்ட அமைப்பாகும். இதற்கு அடுத்த அமைப்பு தென்னை உற்பத்தியாளர் கூட்டமைப்பு (CPF) ஆகும். இவற்றின் மூன்றாவது மற்றும் தலைமை அமைப்பு உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் (CPC) ஆகும். ஒவ்வொரு உழவர் உற்பத்தியாளர் நிறுவனமும் தனது செயல் எல்லையில் 8 கோடி காய்களை உற்பத்தி செய்யக் கூடிய 1000 தென்னை சாகுபடியாளர்களை கொண்டதாக இருக்கும்.

இந்தியாவில் தற்போதுள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள்

- 9582 தென்னை உற்பத்தியாளர் சங்கம் (CPS) - (8000 பலன் தரும் மரங்களை கொண்ட அமைப்பு)
- 735 தென்னை உற்பத்தியாளர் கூட்டமைப்பு (CDF) - (1 லட்சம் பலன் தரும் மரங்களை கொண்ட அமைப்பு)
- 67 தென்னை உற்பத்தியாளர் நிறுவனங்கள் (CPS) - (10 லட்சம் பலன் தரும் மரங்களை கொண்ட அமைப்பு)

## <u>தென்னை பயிர் காப்பீட்டு திட்டங்கள்</u>

**<u>நோக்கம்:</u>** மரங்கள் எதிர்பாராதவிதமாக மடிந்து விடுவதன் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை சரியான தருணத்தில் ஈடுகட்டுவதற்காக பயிர் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான பிரியம் தென்னை வளர்ச்சி வாரியம் 50% – மாநில அரசு 25% – விவசாயி 25% என்ற பங்கீட்டு முறையில் செலுத்தப்படுகிறது.

| **மரங்களின் வயது தொகுதி** | **பிரிமியம் ரூ:** | **வாரியத்தின் பங்கு** | **மாநில அரசின் பங்கு** | **விவசாயி** பங்கு | **காப்பீட்டு தொகை** |
|---|---|---|---|---|---|
| 4 – 15 வருடம் | 9.00 | 4.50 | 2.25 | 2.25 | 900 |
| 16 – 50 வருடம் | 14.00 | 7.00 | 3.50 | 3.50 | 1750 |

## <u>கேரா சுரக்ஷா காப்பீட்டு திட்டம் ( தென்னை மரம் ஏறுபவர்களுக்கு)</u>

தென்னை மரம் ஏறுபவர்களின் ஆபத்தை குறைக்கவும், மரம் ஏறும் பணிக்கு வருபவர்களை ஊக்கப்படுத்தும் வகையிலும் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

| <u>தென்னை மரம் ஏறுபவர்களுக்கான கேரா சுரக்ஷா காப்பீட்டு திட்டம்</u> | | | |
|---|---|---|---|
| **ஒரு நபருக்கு ஆண்டு பிரிமியம் ரூ.** | **வாரியத்தின் பங்கு ரூ.** | **மரம் ஏறுபவர் பங்கு ரூ.** | **காப்பீட்டு தொகை** |
| 375.00 | 281.00 | 94.00 | 5,00,000 |